OS.No. 326/2019

Dated : 19.03.2024

Time: 11.30 a.m to 11.50 a.m

P.W- 1 சாட்சி அண்ணாமலை அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் சார்பாக குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணை

1) நான் தேக்கம்பட்டு கிராமத்தில் நடுதெருவில் வசித்து வருகிறேன். எனக்கு எழுத படிக்க தெரியாது. சுமார் 7-8 நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் பிரதிவாதிகள் உறவு முறை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வெங்கடேசன் வீட்டிற்கு எதிரே குடியிருக்கிறேன். நடுகவுண்டருக்கு 4 மகன்கள் மற்றும் 2 மகள்கள் என்றால் சரியல்ல. தீர்த்தான் என்பவருக்கு வெள்ளையன், அண்ணாமலை, தீர்த்தி, தீர்த்தான், பிச்சன் ஆகியோர்கள் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான்.

2) கல்வராயன் மலைகளில் உள்ள ஊர்களில் அதிகமாக தீர்த்தான், தீர்த்தி, அண்ணாமலை, உண்ணாமலை, உண்ணாயி, லட்சுமணன், பிச்சன் என்ற பெயர்களில் நிறைய பேர் இருப்பார்கள் என்றால் சரிதான். தீர்த்தனின் வாரிசுகள் வெள்ளையன், அண்ணாமலை காலமாகிவிட்டார்கள். அண்ணாமலைக்கு 6-9 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். வெள்ளையனுக்கு மாது, செல்வி, ஜெயலட்சுமி ஆகியோர் வாரிசுகள். தாவாவில் எவ்வளவு சர்வே எண்கள் என தெரியாது. அவற்றின் விஸ்தீரணம் 4-1/2 ஏக்கர் ஆகும். ஆனால் ஒவ்வொரு சர்வே எண்ணின் விஸ்தீரணம் தெரியாது.

3) கல்வராயன் மலையில் உள்ள சொத்துகள் அணைத்தும் ஜாகீர் சொத்துக்கள் என சொல்வார்கள் என்றால் சரிதான். 1971 க்கு முன்பு கல்வராயன் மலையில் உள்ள சொத்துக்கள் அணைத்தும் சர்வே செய்யவில்லை என்றால் சரிதான். அந்த காலத்தில் சர்வே எண் இல்லாததால் 4 புற எல்லையை சொல்லித்தான் சொத்துக்களை விற்பார்கள் என்றால் சரிதான். அவ்வாறு விற்கும் சொத்திற்கு ஆதாரம் எழுதி கொள்வார்கள் என்றால் சரிதான். அவ்வாறு தான் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்வார்கள் என்றால் சரிதான்.

4) என் தகப்பனார் தீர்த்தானின் அப்பா பெயர் நடுகவுண்டர். நான் ஏற்கனவே சொன்ன தீர்த்தான் என்பவரின் அப்பா பெயரும் நடுக்கவுண்டர். இறந்து போன அண்ணாமலை எங்களுடைய கூட்டாளி என்றால் அவ்வாறு இல்லை. அவரது வீட்டிற்கு அடிக்கடி போவேன் என்றால் இல்லை. ஆனால் அவர் ஊரில் இருந்ததால் எனக்கு பழக்கம். அவரும் என்னுடைய தெருவில் தான் குடியிருந்தார். 1970 ல் செட்டில்மெண்ட் அலுவலர் மூலம் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய சொத்திற்கு கிழக்கில் அண்ணாமலை நிலமும் மேற்கே நடுக்கவுண்டர் மகன் அண்ணாமலை நிலுமும், வடக்கில் கோவிந்தன் நிலமும், தெற்கில் தீர்த்தான் நிலமும் உள்ளது.

5) 1970 க்கு முன்பு உரிமை மூலம் குறித்த மூல பத்திரம் எதுவும் நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் 2019 ல் வழக்கு தாக்கல் செய்தேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு 35 ஆண்டுகளுக்கு முன்பு என் தகப்பனார் இறந்ததாக சொல்லியிருந்தேன். அது சுமார் 1985 வாக்கில் இருக்கும். என் தகப்பனார் பெயரில் உள்ள வருவாய் ஆவணங்கள் எதையும் நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி நான் முன்நிறுத்தியுள்ள வருவாய் ஆவணங்கள் பிரதிவாதிகளின் பாட்டனாரான நடுக்கவுண்டர் பெயரில் தான் ஒப்படைத்துள்ளேன் என்றால் அது தவறு.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

Sd/-K.Ananthan
**Subordinate Judge,**
**Attur.**